**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT,PERAMBALUR.**

**Calendar**

**Miscellaneous** DVC. No.12/2022

**Preliminary Register**

**Sessions**

**DEPOSITION OF WITNESS FOR** Prosecution ம.சா.1 / Defence / Court

| | |
|---|---|
| **Name** | திருமதி.மாலதி |
| **Father's/Husband Name** | திரு. சாந்தப்பன் |
| **Village** | பெண்ணகோணம் |
| **Taluk** | குன்னம் |
| **Age** | 27 /2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 29.08.2022**

**முதல் விசாரணை :-**

01.நான் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் எனக்கு தெரியும்.

02. என்னுடைய தரப்பு சான்றாவணம் 1. கணவரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.1 ஆகும். 2. நகை அடகு வைத்த ரசீது அசல் ம.சா.ஆ.2 ஆகும். 3. கிரைய பத்திர நகல் ம.சா.ஆ.3 ஆகும். 4. TN,46 X0873 இருசக்கர வாகணத்தின் RC Book நகல் ம.சா.ஆ.4 ஆகும். 5. TN,46 V 8887 இருசக்கர வாகணத்தின் R.C Book நகல் ம.சா.ஆ.5 ஆகும். 6. TN,46 Y 0456 நான்கு சக்கர வாகணத்தின் R.C Book நகல் ம.சா.ஆ.6 ஆகும்.

03. 7. திருமண சீதண பொருட்களின் வரிசை பட்டியல் ம.சா.ஆ.7 ஆகும். 8. டாட்டா மோட்டார் பைனான்ஸ் கம்பெனியால் வழங்கப்பட்ட 26.08.2022ம் தேதியிட்ட ஸ்டேட்மெண்ட் ம.சா.ஆ.8 ஆகும். மனுபடி தீர்ப்பாக வேண்டிகொள்கிறேன்.

**1 முதல் 4 எதிர் மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

**01.** 09.01.2022ம் தேதி என் கணவர் விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். விபத்து நடந்த விசயத்தை என்னிடம் யார் சொன்னார் என்றால் என் மாமனார்

சொன்னார். விபத்து நடந்தபோது நான் எங்கு இருந்தேன் என்றால் என் அம்மாவீட்டில் இருந்தேன். என் கணவர் எங்கிருந்து எங்கு சென்றபோது விபத்து ஏற்பட்டது என்றால் என் கணவர் பெருமத்தூர் அரசு மதுபான கடையில் இருந்து மது பாட்டிகள் வாங்கி கொண்டு வந்தபோது விபத்து ஏற்பட்டது.

02. விபத்து நடந்த சமயத்தில் என் கணவர் எங்கு தங்கியிருந்தார் என்றால் இரண்டு நாட்களுக்கு முன்பு என்னை என் அம்மா வீட்டில் விட்டுவிட்டு வந்து பெண்ணகோணத்தில் தங்கியிருந்தார்.

03. இரண்டு நாட்களுக்கு எங்கு இருந்தார் என்றால் பெரம்பலூர் நான்கு ரோட்டில் வாடகை வீட்டில் தங்கி இருந்தார். நானும் அங்கு தான் இருந்தேன் என்றால் சரிதான்.

04.என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1ம் எதிர் மனுதாரர் சட்டவிரோதமாக மது விற்பனை செய்கிறார் என்று சொல்லியுள்ளதே ஏற்கனவே தாக்கல் செய்த மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அந்த விவரத்தை மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக ஒத்திவைக்கப்படுகிறது)